7. விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

(அ) உழவர்களுக்கான கடன் நிவாரணம்பற்றி ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்து உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சரின் அறிக்கை :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பதற்கு மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய அனுமதியைக் கோரி இருக்கிறார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 23—3—1992-இல் நடைபெற்ற கேள்வி நேரத்தின் போதும், 8—4—1992 அன்று கூட்டுறவுத் துறைக்கான மானிய கோரிக்கைகளின் மீது விவாதம் நடைபெற்ற போதும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய போது, அப்போது தனக்குக் கிடைத்த, கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், கடன் பொறுப்பில் 50 சதவீதத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு விரும்பியது என்றும் எஞ்சியுள்ள 50 சதவீதத்தை மத்திய அரசு கடனாகத்தான் கொடுத்தது என்றும், வி.பி. சிங் அறிவித்த உழவர்களுக்கான கடன் நிவாரணத் திட்டம், வெறும் கண் துடைப்பு என்றும், உண்மையில் மாநில அரசு 50 சதவீத கடன் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்தது என்றும், எஞ்சியுள்ள 50 சதவீதத்தை மாநில அரசிடமிருந்து வசூலிக்கத் தக்க விதத்தில் கடனாகத்தான் மத்திய அரசு வழங்குகிறது என்றும் கூறி இருந்தார்கள். ஆனால் தற்போது சேகரிக்கப் பட்ட தகவலின் அடிப்படையில் உண்மைகள் பின் வருமாறு என்பதை அரசின் சார்பில் அவைக்கு நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

'' தேசிய முன்னணி அரசு அறிவித்த கூட்டுறவு நிறுவனங் களிடமிருந்து உழவர்கள் பெற்ற கடன்கள் குறித்து கடன் நிவாரணத் திட்டம் மொத்தம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கள் மற்றும் அமைச்சர்கள் அமைதி காக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மொத்த கடன் தொகையில் 50 சதவீதத்தை மாநில அரசுகள் ஏற்கவும் எஞ்சி யுள்ள தொகையை மத்திய அரசு ஏற்கவும் வகை செய்தது.

பல மாநிலங்கள் தங்களுக்கு நிதி இடர்பாடு உள்ளது என்று தெரிவித்ததை கருத்தில் கொண்டு மாநில அரசுகள் ஏற்க வேண்டிய 50 சதவீதத் தொகையை 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாகக் கருதப்பட்டது. இத்திட்டத்தின் செலவு பொறுப்புகள் முழுவதையும் மைய அரசு ஏற்கவில்லை. தமிழ் நாட்டிலே கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து உழவர்கள் பெற்ற கடனைப் பொறுத்தவரையில் இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு 289 கோடியே 43 இலட்சம் ரூபாய் ஆகும். இத்தொகையில் 61 கோடியே 67 இலட்சம் ரூபாயை கூட்டுறவு நிறுவனங்களுக்கு மத்திய அரசு இன்னும் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாபாடு மூலமாக கூட்டுறவு நிறுவனங்களுக்கு மத்திய அரசு இது வரையில் வழங்கிய 50 சதவீத தொகையை மாநில அரசு திருப்பிச் செலுத்தி வருகிறது.

முற்பகல் 11-30

(ஆ) சத்துணவுத் திட்ட பணியாளர்களுக்கு வார விடுமுறை அளிப்பது குறித்து சமூகநல அமைச்சரின் அறிக்கை:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிட அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 1982ஆம் ஆண்டு முதல் சுமார் 68,000 மையங்களில் 75 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் தினந்தோறும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பயன்பெறும் குழந்தைகள் நல மையங்களும், 5 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகள் பயன்பெறும் பள்ளி மையங்களும் ஆண்டு முழுவதும் எல்லா நாட்களிலும் இயங்கி வருகின்றன. இந்த மையங்களில் பணி புரியும் பகுதி நேர பணியாளர்களுக்கு வார விடுமுறை எதுவும் கிடையாது. இந்தப் பணியாளர்களுக்கு வாரந்தோறும் சனி, ஞாயிறு விடுமுறை விட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. சத்துணவு பணியாளர் சங்கங்களின் முக்கியமான கோரிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த கோரிக்கையை தாய் உள்ளத்தோடு பரிவுடன் பரிசீலித்தார்கள். சத்துணவு பணியாளர்களுக்கு வார விடுமுறை விட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் குழந்தைகளுக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY